குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2020

அ.சா.4

2025−ம் ஆண்டு நவம்பர் 18−ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 04−வது நபரின் வாக்குமூலம் (1969−ம் ஆண்டின் 54−வது விதியின் 9−வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுதாகர் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.21 மணி,

Accused Jayakumar present. Advocate Mr.Dhanakoteeswaran present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பனங்காட்டில் குடியிருந்து வெல்டிங் பட்டறை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டு ஒருநாள் பகல் 01.00 − 01.30 மணியளவில் நானும், அ.சா.2 அருண் என்பவரும் முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் உள்ள சிவா கார்டன் என்ற இடத்தின் அருகே பேசிக்கொண்டிருந்தபோது, அப்போது சாலையில் திடீரென சத்தம் கேட்டது. திரும்பி பார்த்தபோது விபத்து நடந்தது.

2. ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் வெங்கடேஷ் என்பவர் ஓமலூர் பக்கமிருந்து முத்துநாயக்கன்பட்டி நோக்கி வந்தார். அப்போது டாடா ஏசிஇ வாகனம் முத்துநாயக்கன்பட்டி பக்கமிருந்து ஓமலூர் நோக்கி வந்தது. இரண்டு வாகனங்களும் மோதிக் கொண்டது. எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரியாது. வெங்கடேஷ் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் 1643 ஆகும். டாடா ஏசிஇ வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அதனை ஓட்டி வந்த நபரின் பெயர் ஜெயக்குமார் என்று சொன்னார்கள். ஆனால் அவரை என்னால் அடையாளம் காட்டமுடியாது.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:44 +0530

3. வெங்கடேசுக்கு காதில் இரத்தம் வந்து உடலில் காயம் ஏற்பட்டது. கை, கால்களில் காயம் ஏற்பட்டது. தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். 10 நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. கடந்த 08.09.2019 ஆம் தேதி 13.30 மணியளவில் ஓமலூர் – முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் வெங்கடேஷ் என்பவர் டி.என்.30 பி.எஸ்.1643 என்ற பதிவெண் கொண்ட ீஹரோ ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் முத்துநாயக்கன்பட்டி நோக்கி சென்றபோது அதே சாலையில் அவருக்கு எதிர்திசையில் ஓமலூர் நோக்கி ஆஜர் எதிரி டி.என்.52 இசட். 7932 என்ற பதிவெண் கொண்ட டாடா ஏசிஇ வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, வெங்கடேஷ் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் விபத்தினை பார்க்கவில்லை.

5. விபத்தினை நேரில் பார்த்துவிட்டு, விசாரணையின்போது மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.26 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:47 +0530